OS.No. : 74/2022

நாள் : 20.02.2025.

வா.சா. : 1

பெயர் : ஜான்பீவி

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து துளசேத்திரபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரி. தாவா சொத்துக்கள் பக்கிரிமுகமது என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் சரி. பக்கிரி முகமதுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரி. முதல் மனைவி பெயர் சுபேதா என்றால் சரி. இரண்டாம் மனைவிதான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி பாத்திமாபீவி என்றால் சரி. பக்கிரி முகமது–சுபேதா ஆகியோருக்கு மூன்று மகன்கள் மூன்று மகள்கள் என்றால் சரி. பக்கிரிமுகமது–சுபேதா வின் இளைய மகன் சாதிக்பாட்ஷா தான் என் கணவர் என்றால் சரி. பக்கிரி முகமது 27.03.2013 அன்று இறந்து விட்டார் என்றால் சரி. அவர் இறந்தது எனக்கு தெரியும் என்றால் சரி. தாவா சொத்தை 15.03.2019 அன்று ஏலம் எடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரி. பக்கிரி முகமது இறந்து ஆறு வருடம் கழித்து தான் இந்த சொத்தை நான் ஏலம் எடுத்திருக்கிறேன் என்றால் சரி. பக்கிரி முகமது இறந்த பிறகு அவரது சொத்தை அவரின் வாரிசுகளை சேர்க்காமல் 2ம் பிரதிவாதி ஏலம் விட்டது தவறு என்றால் சரியல்ல. பேங்கில் தான் ஏலம் விட்டார்கள். பக்கிரி முகமது வின் வாரிசுகளை சேர்க்காமல் பேங்க் ஏலம் விட்டதும் நாங்கள் அதை ஏலம் எடுத்ததும் தவறு என்றால் சரியல்ல. நாங்கள் பொது இடத்தில் தான் ஏலம் எடுத்தோம். நோட்டீஸை பார்த்து தான் ஏலம் எடுக்கபோனோம். 2ம் பிரதிவாதி இறந்த நபருக்கு எதிராக விட்ட ஏலம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதெல்லாம் 2ம் பிரதிவாதி சொல்லவில்லை. நாங்கள் பொதுவில் தான் ஏலம் எடுத்தோம். அந்த செல்லாத ஏலத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் எந்த உரிமையையும்

S. John Beevi

கோர முடியாது என்றால் சரில்ல. 1ம் பிரதிவாதியின் இரண்டாம் மனைவி முதல் பிரதிவாதி என்றாலும் அவருக்கு சொத்தில பாகம் கிடைக்ககூடாது என்ற நோக்கத்தில் அவரது முதல் மனைவி வாரிசுகளுடன் சேர்ந்து இந்த ஏலச்சான்றிதழை தயார் செய்துள்ளோம் என்றாலும் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் நோட்டீசை பார்த்துவிட்டு பொது இடத்தில் தான் ஏலம் எடுத்தோம். ஏலச்சான்றிதழ் தயார் செய்ததாக சொல்வது பொய். தாவா சொத்து என் மாமனார் பக்கிரி முகமதுக்கு சொந்தமான சொத்து என்று தெரிந்து தான் ஏலம் எடுத்தோம் என்றால் இல்லை. நோட்டீஸ் எல்லா இடத்திலும் ஒட்டியிருந்தார்கள் அதைப்பார்த்துவிட்டு போய் நாகப்பட்டிணத்தில் ஏலம் எடுத்தோம். 1ம் பிரதிவாதிக்கும் பக்கிரி முகமதுவிற்கும் திருமணம் ஆனமுதல் தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வாசாஆ 1 ஆவணத்தில் ஏலம் எடுத்த அன்றே சொத்தை வசம் ஒப்படைக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றாலும் ஆனால் அதுபோல் சொத்தை நாங்கள் வசம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வங்கியில் சொத்தை ஏலம் எடுத்த அன்றே வசம் கொடுப்பதாக சொன்னார்கள். ஏலம் எடுத்து இருபது வருடமாகிறது. இதுவரை வசம் கொடுக்கவில்லை. ஏலம் எடுத்த பிறகு தான் அந்த சொத்தில் 1ம் பிரதிவாதி இருப்பது தெரியும். அவர்களிடமிருந்து சொத்தை எங்கள் வசம் ஒப்படைக்கவேண்டும். வாசாஆ 1 ஆவணத்தின்படி சொத்தை வசம் எடுக்காததால் அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. பேங்க்காரர்கள்தான் எங்களிடம் சொத்திற்கான தொகையை வாங்கினார்கள். அவர்கள் தான் சொத்தை காலி செய்து ஒப்படைப்பதாக சொன்னார்கள். அவர்கள் தான் காலி செய்து ஒப்படைக்க வேண்டும். வாசாஆ 1 ஆவணம் செல்லத்தக்க

S. John Beevi

ஆவணம் இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. ஏலத்தில் பணம் கட்டி எடுத்துள்ளோம் பேங்க் காரர்கள் தான் சரிசெய்து எங்களுக்கு ஒப்படைக்க வேண்டும். தாவா சொத்தில் எங்களுக்கு நல்ல உரிமை மூலம் இல்லை என்றாலும் அதனால் சுவாதீனப்பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பக்கிரி முகமது 1ம் பிரதிவாதிக்கு ஹிபா ஆவணம் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றாலும் அதனால் அவர்தான் அந்த சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. ஹிபா எழுதிக்கொடுத்ததே எங்களுக்கு தெரியாது. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து வாசாஆ 1 ஆவணத்தை பதிவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அந்த ரிட் மனுவில் 1ம் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்றால் சரி. பேங்கை தான் சேர்த்தோம். அதனால் அந்த ரிட் மனுவில் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவும் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையே இல்லை என்று 1ம் பிரதிவாதி கட்சி செய்துள்ளார் என்றாலும் அது குறித்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஏலத்தில் எடுத்ததால் பேங்க்காரர்கள் தான் அதை கிளியர் செய்து கொடுக்கவேண்டும். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்தை அனுபவித்து வருவதால் அவரை அங்கிருந்து காலி செய்ய முடியாது என்றாலும் அதனால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவர்கள் அங்கிருந்ததே ஏலம் எடுப்பதற்கு முன்பு தெரியாது. அதனால் பேங்க்காரர்கள் தான் காலி செய்து கொடுக்க வேண்டும். 1ம் பிரதிவாதியின்

S. John Beevi

செலவுத் தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும்.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

17,75,000/- ரூபாய்க்கு தாவா சொத்தை ஏலம் எடுத்துள்ளேன். எப்போது ஏலம் எடுத்த சான்றிதழை ரிஜிஸ்டர் ஆபிஸில் பதிவு செய்தேன் என்றால் ஏலம் எடுத்த கொஞ்ச நாட்களில் தேதி நினைவில்லை. 2ம் பிரதிவாதி வசம் எடுத்து கொடுக்க வேண்டுமென்று கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வங்கியில் ஏலத்தில் எடுங்கள் நாங்கள் கிளியர் செய்து தருகிறோம் என்று சொன்னார்கள். அதனால் தான் ஏலத்தில் எடுத்தோம். சொத்தை நீதிமன்றம் மூலம் சுவாதீனப்பரிகாரம் கோரியுள்ள நிலையில் 2ம் பிரதிவாதிக்கு எதிராக அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பேங்க்காரர்கள் சொன்னதால் தான் சொத்தை ஏலம் வாங்கினோம். அதனால் அதை அவர்கள் தான் கிளியர் செய்து தரவேண்டும். 2ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியம் அற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. பேங்க்காரர்கள் தான் இதை கிளியர் செய்து தரவேண்டும். 2ம் பிரதிவாதி பெயரில் சொல்லியுள்ள வழக்கு மூலம் உண்மையல்ல என்றால் சரியல்ல.

S. John Beevi

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

20/2/25